DEC 2016
UNIVERSITY, SRI LANKA

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

இரண்டாம் வருட/ முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு 2014/2015
(ஒக்டோபர் / நவம்பர் 2016)

## TLS 2143 தேர்ந்தெடுக்கப்பட்ட பாட நூல்கள்

## Prescribed Texts - I

நேரம்: 03 மணித்தியாலயங்கள்

முதலாம் பகுதியில் முதலாம் வினா உள்ளிட்டு இரு வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியிலிருந்து எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

---

### பகுதி – 1

01) பின்வரும் செய்யுள்களின்

அ) பொருளை எழுதுக.

ஆ) அடிக்கோடிட்ட பகுதிகளின் சிறப்பை விளக்குக

i) நெய்தல் உண்கண் பைதல கலுழ,
பிரிதல் எண்ணினை ஆயின், நன்றும்
அரிது உற்றனையால் - பெரும! உரிதினின்
கொண்டு ஆங்குப் பெயர்தல் வேண்டும் - கொண்டலொடு
குரூஉத் திரைப் புணரி உடைதரும் எக்கர்ப்
பழந் திமில் கொன்ற புது வலைப் பரதவர்
மோட்டு மணல் அடைகரைக் கோட்டு மீன் கெண்டி,
மணம் கமழ் பாக்கத்துப் பகுக்கும்
வளம் கெழு தொண்டி அன்ன இவள் நலனே.

(10 புள்ளிகள்)

ஆ) சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் - நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம்

(05 புள்ளிகள்)

இ) பூண் மின்னு மணிப்பேழை போன்றருஞ்சூல் முற்றணிந்தாள்
கோண் மின்னும் முடிதாழக் கொழுநனைத் தான் தொழ – அவனும்
மாண் மின்னும் மனம் வெருவி வணங்க பின்பு இருவர் தொழும்
தாண் மின்னும் மகன் தந்த ஆசியொடு தடங்கொண்டார்

(05 புள்ளிகள்)

02) அ) தனிப்பாடல்கள் என்பதை வரையறை செய்து அவற்றின் பண்புகளைக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

ஆ) இல்வாழ்க்கை நெறிக்கு இன்றியமையாத அறநெறிகள் பற்றி ஔவையார் கூறுவனவற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

03) சீறாப்புராணம் நதி கடந்த படலத்தினை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றிற்கு விடை தருக.

அ) நபிகள் நாயகத்தின் கனவில் தோன்றிய இரு சந்தர்ப்பங்களிலும் இறைவன் வழங்கிய அறிவுரைகள்

(10 புள்ளிகள்)

ஆ) 'வெள்ளப்பெருக்கு' வர்ணிக்கப்படுவதிலுள்ள கவித்துவச் சிறப்பு

(10 புள்ளிகள்)

## <u>பகுதி – II</u>

04) அகநானூற்றில் பாலை நிலத்திற்குரிய அகத்திணை ஒழுக்கம் சித்திரிக்கப்படும் விதத்தை உமக்குத் தரப்பட்ட பாடற் பகுதியை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(20 புள்ளிகள்)

05) ஆற்றுப்படை நூல்களின் அமைப்பு முறை, அவற்றின் உள்ளடக்கம் என்பன குறித்து பெரும்பாணாற்றுப்படையை அடிப்படையாகக் கொண்டு விளக்குக

(20 புள்ளிகள்)

06) சூசை, மரியாள், இயேசுக்கிறிஸ்து ஆகியோரின் சிறப்புக்களை வீரமாமுனிவர் விபரிக்குமாற்றை தேம்பாவணி மகவருள் படலத்தை ஆதாரமாகக் கொண்டு மதிப்பிடுக

(20 புள்ளிகள்)

07) பாலை நிலத்தின் தன்மை வர்ணிக்கப்பட்டுள்ள முறைமையினை கலிங்கத்துப்பரணி 'காடு பாடியது' என்னும் பகுதியை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

**<u>அல்லது</u>**

சமூக அறநெறிக் கருத்துக்கள் 'இனியவை நாற்பதில்' புலப்படுத்தப்பட்டிருக்குமாற்றினை விளக்குக.

(20 புள்ளிகள்